23rd February 1955]

South India Co-operative Spinning Mills, Tirunelveli.

*856 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have any proposal to give a loan of 10 lakhs of rupees out of the Cess Fund for buying a co-operative mill at Tirunelveli;

(*b*) whether it has been constructed; and

(*c*) whether the yarn produced in that mill will be sold at a price lower than the market rate?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The Government have sanctioned a loan of Rs. 10 lakhs from the Cess Fund to the Madras State Handloom Weavers' Co-operative Society for taking shares in the South India Co-operative Spinning Mills, Ltd., at Tirunelveli.

" (*b*) The Board of Directors of the South India Co-operative Spinning Mills, Ltd., has decided to purchase the lands, buildings, certain items of electrical machinery, etc., belonging to Murugan Textiles, Ltd., Tirunelveli, and complete the mill by installing requisite additional machinery.

" (*c*) The yarn will be sold at a reasonable price which is expected to compare not unfavourably with market rates."

SRI N. K. PALANISAMY :—" இதற்காகப் பணத்தை ஒதுக்கி வைத்து மூன்று வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதுவரையிலும் அந்த மில்லை ஏற்படுத்துவதற்கு வேண்டிய இடம் கூட ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. சர்க்கார் இந்தக் குறிப்பிட்ட மில்லையே வாங்கவேண்டுமென்று காத்திருப்பதற்குக் காரணம் என்ன இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM:—" இதில் சர்க்கார் செய்வது ஒன்றுமில்லை. கூட்டுறவு சங்கம் தான் இம்மாதிரி மில்லை ஏற்படுத்த வேண்டுமென்று சிபார்சு செய்தது. சர்க்கார் அதனை அங்கீகரித்தது. ஒரு மில்லை வாங்குவதென்று அவர்கள் தான் சிபார்சு செய்தார்கள் அதை சர்க்கார் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்படியாக அவர்களுக்கு உத்திரவு போட்டார்கள், அந்த வேலை கவனிக்கப்பட்டு வருகிறது."

SRI M. KALYANASUNDARAM :—" சர்க்காருக்கு இதில் நேரடியான பொறுப்பு இல்லாவிட்டாலும் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதனால் சர்க்காருக்கும் இதில் அக்கறையிருக்கவேண்டும், சர்க்கார் இப்பொழுது வாங்க இருக்கும் மில்லில் மிகவும் பழமையான இயந்திரங்களே இருக்கின்றன என்று முன்பே சர்க்காருக்குப் பல புகார்கள் வந்திருக்கின்றன. அவற்றுக்கு இப்பொழுது போடப்பட்டிருக்கும் மதிப்பு மிகவும் அதிகமானது, அந்த இயந்திரங்களை இவ்வளவு விலை கொடுத்து வாங்கினாலும் அதிக நாள் உழைக்கும் என்று சொல்வதற்கில்லை என்றெல்லாம் சர்க்காருக்குப் பல முறை எடுத்துச் சொல்லப்பட்டு வந்திருப்பதால் இவற்றை மறுபடியும் சர்க்கார் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த விஷயத்தில் தன்னுடைய பொறுப்பை சர்க்கார் தட்டிக்கழிக்கவில்லை, சர்க்காரும் நன்றாக இவ்விஷயத்தைப் பற்றி பரிசீலனை செய்த பிறகுதான இதை மேற்கொண்டு அனுமதித்திருக்கிறார்கள்."